கூட்ட எண் 01
2018 - 2019 -ம் ஆண்டு

நகராட்சி அலுவலகம்,
ஆரணி,
நாள் 30.04.2018.

**2018-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30.04.2018 ந் தேதி திங்கட் கிழமை மாலை 4.00 மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

**பொருள்கள்**

1. இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் மார்ச் 2018ம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

2. இந் நகராட்சி பொறியாளர் அவர்களின் மார்ச் 2018ம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

3. இந்நகராட்சி துப்புரவு அலுவலர் அவர்களின் மார்ச் 2018ம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

4 திரு.A.அருண்குமார், தலைவர் சிறுகுறு பெரு வியாபாரம் செய்வோர் நலச்சங்கம், ஆரணி அவர்கள் விளம்பரப் பலகைகள், நிரந்தர விளம்பரப் பலகைக்ள் மற்றும் Flex Board ஆகியவை சாலையில் வைப்பதை நிரந்தர தடை செய்ய வேண்டும் என தெரிவித்து ஆணையாளரை மூன்றாம் பிரதிவாதியாக சேர்த்து வழக்கு எண் WP No. 3664 / 2018ல் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி, வழக்கில் ஆஜராக நகராட்சி வழக்கறிஞர் திரு. பால்ராஜ் அவர்கள் வழக்கறிஞர் கட்டணம் ரூ.15000/- (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) வழங்கமாறு கோரியுள்ளார். எனவே, வழக்கறிஞர் கட்டணம் ரூ. 15000/- வழங்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம், மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் ஒப்புதல்அளிக்கலாம். அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 517/எப்1/2018)

5. திரு. C.S.முத்துகுமார் செயலாளர் ஆரணி பழ வியாபாரிகள் சங்கம், ஆரணி அவர்கள் ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட காந்தி ரோடு மற்றும் கோட்டை தெருவில் (சாலையில்) வியாபாரிகள் வியாபாரம் செய்து கொள்ள உத்தரவிடக்கோரி ஆணையாளர் ஆரணி நகராட்சி அவர்களை முதல் பிரதிவாதியாக சேர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.No.232/2018-ல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்கூறிய வழக்கு சம்மந்தமான புகைப்படங்கள் (Photos) சி,டி க்கள் ஆல்பம் தயாரித்து (3 எண்ணிக்கை) சென்னை வழக்கறிஞர் திரு. பால்ராஜ் அவர்களிடம் வழங்கியதற்கு உண்டான செலவினம் ரூ. 2400/- (ரூபாய் இரண்டாயிரத்து நானூறு மட்டும்) வழங்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம், மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் ஒப்புதல்அளிக்கலாம். அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

6. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை-5 அவர்களின் கடிதம் ந.க.எண் 30322/2012/இ3 நாள் 14.03.2016ல் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கு முதல் நிலை நகராட்சிகளின் பங்குத் தொகையாக ரூ.26,21,000/- வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்படி தொகையில் ஏற்கனவே இந் நகர மன்றத் தீர்மான எண் 69 நாள் 27.06.2014ல் ரூ. 9.00இலட்சமும், மற்றும் நகர மன்றத் தீர்மான எண் 04 நாள் 31.05.2016ல் 12.60 இலட்சமும் நகர மன்றத்தின் ஒப்புதல் பெற்று செலுத்தப்பட்டுள்ளது. இருப்பினும், மேற்காணும் பங்குத் தொகை ரூ.26.21,000/-யில் 21,60,000/- போக மீதமுள்ள பங்குத் தொகை உடன் செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்காணும் பங்குத் தொகை

ரூ.4.61.000/-யினை நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை -5 அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி பங்குத் தொகை செலுத்தியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 714/2013/இ1)

7. இந்நகராட்சியில் அலுவலக தபால்கள் வெளியூர்களுக்கு அனுப்புவதற்கு தேவையான அஞ்சல் வில்லைகள் 2018-2019ம் ஆண்டிற்கு வாங்க ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ.30000/-க்கு மன்றத்தன் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம், மேலும் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம். (கோப்பு எண் 1111/பொதுபி/2018)

8. ஆரணி நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவில் குடிநீர் விநியோக லாரி எண் TN25Y0238 மற்றும் குடிநீர் விநியோக பராமரிப்பு வாகனம் TATA ACE MINI AUTO TN25V9461 ஆகிய இரு வாகனங்களுக்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் சாலைவரி, பசுமை வரி ஆகியவை செலுத்த வேண்டியுள்ளது. எனவே, 01.04.2018 முதல் 31.03.2019 வரையுள்ள காலத்திற்கு மேற்காணும் இரண்டு வாகனங்களுக்கு சாலைவரி,பசுமைவரி ஆகியவை செலுத்த ஆகும் தோராய செலவினம் ரூ. 20000/-க்கு மன்றத்தன் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம், மேலும், அவசரம் அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று சாலைவரி, பசுமைவரி ஆகியவை செலுத்தியதை மன்றம் அங்கீகரிக்கலாம். (கோப்பு எண் /இ1/2018)

9. ஆரணி நகராட்சியில் ஏலம் எடுக்கப்படாத 8இனங்களுக்கு மறுஏலம், ஒப்பந்தப்புள்ளி கோர விளம்பரம் தினமலர் நாளிதழில் பிரசுரமானது நாள் 18.03.2018 மற்றும் 03.04.2018 மேற்படி தினமலர் நாளிதழ் அலுவலகத்திலிருந்து விளம்பரம் செய்தமைக்கான பட்டியல் தொகை வரப் பெற்றுள்ளது. 18.03.2018ஆம் தேதிய விளம்பர தொகை ரூ. 11592/- மற்றும் 03.04.2018 தேதிய விளம்பர தொகை ரூ. 12096/- ஆக மொத்தம் ரூ. 23688/- செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு அவசர அவசியம் கருதி விளம்பரம் செய்தமைக்கும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 206/அ3/2018)

10. ஆரணி நகராட்சிக்கு சொந்தமான புதுகாமூர் சாலையில் உள்ள நவீன எரிவாயு தகனமேடை இதுவரை ஆரணி நகர எரிவாய தகனமேடை அறக்கட்டளை பராமரித்து அவை ஒப்பந்த காலம் முடிந்து விட்டதால், மீண்டும் பராமரிக்க அறக்கட்டளை மறுப்பு தெரிவித்து விட்டார். எனவே, தற்சமயம் போதிமரம் முதியோர் இல்லம் மற்றும் அறக்கட்டளை சேலம் நிறுவனம் மேற்படி நவீன எரிவாயு தகன மேடையை பராமரிக்க மூன்று ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் விடவும், ஒரு சவத்திற்கு எரியூட்ட வாங்கும் கட்டணத்தில் 20% சதவிகிதம் நகராட்சிக்கு செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம், (கோப்பு எண் 2688/2009/எச்1)

11. இந் நகராட்சியில் அலுவலக பணியாக வெளியூர் பயணம் மேற்கொள்ளும் நகர மன்ற தலைவர், ஆணையாளர்,மற்றும் பணியாளர்களுக்கு 2018 - 2019 ஆம் ஆண்டிற்கு ஏற்படும் பயண செலவினத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (கோப்பு எண் 2559/2012/பி2)

12. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவு பணி மேற்பார்வையாளராக பணிபுரிந்து 20.04.2016ல் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்ட திரு.N.சௌந்தரராஜன் என்பவர்கு WP No. 29969/2017 மற்றும் WMP No. 32485 மற்றும் 32486/2017ன்படி 1) சிறப்பு சேமநல நிதி அசல் ரூ- 2960/- 2) சிறப்பு சேமநல நிதிக்கான வட்டி ரூ. 30824/- 3) நிர்வாக பங்குத் தொகை ரூ. 10000/- ஆக மொத்தம் ரூ. 43784/- யினை வழங்க மன்ற ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (கோப்பு எண் 826/பி2/2018)

13. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் சுகாதார அலுவலராக பணிபுரிந்து வரும் திரு. ந. இலட்சுமணன் அவர்கள் வயது முதிர்வு காரணமாக 30.04.2018ல் ஓய்வு பெற உள்ளதால், அன்னாருக்கு 1) நிர்வாக பங்குத் தொகை ரூ.10000/- வழங்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (கோப்பு எண் 860/பி2/2018)

14 இந் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் நகர சுகாதார செவிலியராக பணிபுரிந்து வயது முதிர்வு காரணமாக 30.04.2018ல் ஓய்வு பெற உள்ள Y. திலகம் என்பவர்கு கீழ்கண்டுள்ளவாறு

1, சிறப்பு சேமநல நிதி அசல் ரூ. 2960/-
2. சிறப்பு சேமநல நிதிக்கான வட்டி ரூ. 14320/-
3. நிர்வாக பங்குத் தொகை ரூ. 10000/-
ஆக மொத்தம் ரூ. 27280/-

மேற்கண்டவாறு சிறப்பு சேமநல நிதி சந்தா, வட்டி மற்றும் பங்குத் தொகை வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது. (கோப்பு எண் 676/பி2/2018)

15 இந்நகராட்சியின் கீழ்குறிப்பிட்டுள்ள குத்தகை இனங்களை அரசாணை எண் 181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 19.09.2008ன்படி 2018-2019 முதல் 2020-2021 வரை (01.04.2018 முதல் 31.03.2021 வரை) அனுபவித்துக் கொள்ளும் உரிமைக்கு இந்நகராட்சியின் நகர மன்றத் தீர்மான எண் 166, நாள் 02.02.2018ன்படி (ந.க.எண் 206/அ3/2018)15.03.2018 அன்று பொது ஏலம் விடப்பட்டதில், மேற்படி 10 (பத்து இனங்களில் 2 (இரண்டு) 1) புதிய பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூல் செய்யம் உரிமை, 20 பழைய பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமை) இனங்கள் மட்டுமே ஏலம் கோரப்பட்டதால், இந்த இரண்டு இனங்கள் தவிர, மற்ற இனங்களுக்கு மறு எலம் கோர இந் நகர மன்றத் தீர்மான எண் 200 நாள் 28.03.2018ன்படி ந.க.எண் 206/அ3/2018 நாள் 27.03.2018 அன்று மறு ஏலம் கோரப்பட்டதிலும், ஏலம் எடுக்க யாரும் முன்வராத நிலையில், மீண்டும் இரண்டாவது முறையாக மறு ஏலம் கோர இந் நகர மன்றத் தீர்மான எண் 201/அ3/2018 நாள் 28.03.2018ன்படி (ந.க.எண் 2016/அ3/2018 நாள் 11.04.2018 அன்று மறு ஏலம் கோரப்பட்டது. இம்முறையும் ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. இவ்வாறான நிலையில் இந்நகராட்சி வருவாய் ஆய்வாளர் ஏலப் பொறுப்பு தொகையினை மறு நிர்ணயம் செய்ய 16.04.2018ன் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளதற்கிணங்க, ஏலப் பொறுப்பு தொகையை கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்து, அதன்படி மறு ஏலம் கோர மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண் | ஏல விவரம் | ஏலப் பொறுப்பு தொகை ரூ. | சொத்து சான்றிதழ் ரூ. | தாசில்தாரிடமிருந்து சால்வன்சி பெறாதவர்கள் ஏலத்தின் போது செலுத்த வேண்டிய பொறுப்புத் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | பழைய மற்றும் புதிய பேருந்து நிலையங்களில் வரும் பேருந்துகளுக்கு மட்டும் கட்டணம் வசூலிக்கும் உரிமை | **5,00,000/-** | **15,00,000/-** | **10,00,000** |
| 2 | பழைய மற்றும் புதிய பேருந்து நிலையங்களில் சுக்கு காபி, முறுக்கு, இட்லி, ரொட்டி, பழம் ஆகிய இதர தட்டுக்கடைகளுக்கு கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமை | **50,000/-** | **1,00,000/-** | **75,000/-** |
| 3 | மாடு அறுக்கும் இடத்தில் கட்டணம் வசூல் செய்தல் | **1,00,000/-** | **3,00,000/-** | **2,00,000/-** |
| 4 | மாடு அறுக்கும் இடத்தில் உள்ள 10 கடைகளில் கட்டணம் வசூல் செய்தல் | **50,000/-** | **1,00,000/-** | **1,00,000/-** |
| 5 | நகராட்சிக்கு பாத்தியப்பட்ட புளிய மரங்கள், இலவம்பஞ்சு மரங்கள், மாமரங்கள், தென்னை மரங்களின் மகசூல்களை மட்டும் அனுபவித்தல் | **10,000/-** | **50,000/-** | **20,000/-** |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | புதியபேருந்து நிலையத்தில் சைக்கிள் ஸ்டெண்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமை (நகராட்சி நிர்ணயிக்கும் இடம் மற்றும்அளவுப்படி) | **1,50,000/-** | **5,00,000/-** | **3,00,000/-** |
| 7 | சூரியகுளம் மீன் பிடித்தல் குத்தகை | **10,000/-** | **50,000/-** | **20,000/-** |
| 8 | பழைய பேருந்து நிலையத்தில் சைக்கிள் ஸ்டெண்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமை (நகராட்சி நிர்ணயிக்கும் இடம் மற்றும்அளவுப்படி) | **1,50,000/-** | **5,00,000/-** | **3,00,000/-** |

அலுவலக குறிப்பு :- இந்நகர மன்றத் தீர்மான எண் 166 நாள் 02.02.2018ன்படி உள்ள ஏலப் பொறுப்புத் தொகை மிகவும் கூடுதலாக இருந்ததால், ஏலம் கோர யாரும் முன் வரவில்லை. எனவே, வருவாய் ஆய்வாளர் குறிப்பின்படி, தற்போது ஏலப் பொறுப்புத் தொகையை மறு நிர்ணயம் செய்ததை மன்றம் ஏற்கலாம். மேலும், மறு ஏலம் கோரவும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 206/இ3/2018)

16 இந்நகராட்சியில் பொதுப் பிரிவில் வருவாய் உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு. கோ. பிரபாகரன் அவர்களின் மகள் செல்வி பி. பவித்ரா என்பவரின் திருமணம் 25.05.2018ல் நடைபெற உள்ளதை முன்னிட்டு அரசு வழங்கும் திருமண முன்பணம் தொகை ரூ.10000/- மட்டும் முன்பணமாக வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (கோப்பு எண் 999/பி2/2018)

17 இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வரும் திரு.எம். முத்து என்பவர்கு புதியதாக இருசக்கர மோட்டார் வாகனம் வாங்க அரசாணை எண் 467 நிதி (சம்பளம் துறை) நாள் 22.09.2009ன்படி முன்பணமாக தொகை ரூ.50000/-மட்டும் வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதி அளிக்கலாம். (கோப்பு எண் 968/பி2/2018)

18 ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தினசரி எடுக்கப்படும் குப்பை மற்றும் கழிவுகளை நகராட்சிக்கு சொந்தமான எருகிடங்கில் கொட்டப்பட்டு வருகிறது. தற்போது கோடைக்காலம் என்பதால் குப்பைகள் எரிய வாய்ப்பு உள்ளத. குப்பைகள் எரிந்தால் புகை மூட்டம் ஏற்பட்டு அருகில் உள்ள வீடுகள் மற்றும் பொது மக்களுக்கு மாசுபட வாய்ப்புள்ளது. மேலும், தீயிணால் ஏற்படும் ஆபத்தினை தடுக்க முன் எச்சரிக்கை நடவடிக்கையாக எருகிடங்கில் புதியதாக ஆழ்துளைக் குழாய் கிணறு அமைத்து மின்விசை பம்பு பொருத்தியும் நீர் சேகரிப்பு தொட்டி அமைக்கவும் ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். மேலும், அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

19 ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 14 திருவள்ளுவர் தெரு மற்றும் வார்டு எண் 25 சீத்தாராமன் தெரு ஆகிய இரண்டு இடங்களில் உள்ள சமுதாய பொதுக் கழிப்பிடங்கள் மிகவும் பழுதடைந்து பொது மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால், அசம்பாவிதம் நிகழா வண்ணம் அந்த இரண்டு பொதுக் கழிவறைகளையும் அப்புறப்படுத்த மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்படி இரண்டு பொதுக் கழிப்பறைகளை அப்புறப்படுத்த அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மண்டல செயற்பொறியாளர் வேலூர் அவர்களின் அனுமதி பெற கடிதம் அனுப்பியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

20 மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட ஆட்சியரகம், திருவண்ணாமலை அலுவலக கடிதம் ந.க.எண் 44/செமதொஅ/2018 நாள் 03.03.2018ல் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க, தமிழக அரசின் ஓராண்டு சாதனைகள் இந் நகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட குறித்து நகராட்சி சார்பாக

கீழ்காணும் தினசரி நாளிதழ்களில் சிறப்பு மலரில் விளம்பரம் செய்யப்பட்டது. அதற்கான செலவினம் பின்வருமாறு செலுத்தப்பட வேண்டியுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | தினமலர் நாளிதழ் | 16,03,2018 | ரூ. 19320/- |
| 2. | தினத் தந்தி நாளிதழ் | 28,03,2018 | ரூ. 19320/- |
| 3. | தின மணி நாளிதழ் | 28,03,2018 | ரூ. 10500/- |
| | | **மொத்தம்** | **ரூ. 49140/-** |

மேற்காணும் தொகை ரூ. 49140/- விளம்பர கட்டணம் செலுத்த மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (கோப்பு எண் 587/இ1/2018)

21 ஆரணி நகராட்சியில் 2018 - 2019 ம் நிதியாண்டில் வருவாய் நிதி, குடிநீர் நிதி, கல்வி நிதி அரசு பல்வேறு திட்டப் பணிகள், குறித்த ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் மாவட்ட செய்தி மற்றும் மாநில செய்தி மக்கள் தொடர்பு துறை அலுவலர் திருவண்ணாமலை மற்றும் சென்னை வாயிலாக வரையறுக்கப்பட்டவாறு விளம்பரம் செய்யவும், இந் நகராட்சி சொத்துவரி, குடிநீர் கட்டணம், கடை வாடகை ஆகியவை செலுத்தக் கோரி பொது மக்களுக்கு அறிவிப்பு விளம்பரம் செய்யவும் ஆகும் செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம், மேலும், மேற்படி விளம்பர கட்டணங்கள் நகராட்சி வருவாய் நிதி மற்றும் அந்தந்த திட்டப் பணிகளிலிருந்தும் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (கோப்பு எண் 761/இ1/2018)

22 ஆரணி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு தூய்மை இந்தியா இயக்கத்தின் கீழ் நகரப் பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்ட விதிகள் - 2011 - இன்படி, தூய்மைப் பணி சிறப்பு கவனம் செலுத்தி நகரினை தூய்மையாக பராமரிப்பது மற்றும் தினசரி உருவாகும் குப்பைகளை உருவாக்கும் இடத்திலேயே தரம் பிரித்து சேகரம் செய்து வாங்குதல், மக்கும் குப்பைகளை சேகரித்து உரம் தயாரித்தல், மக்கா குப்பைகளை சேகரித்து மறுசுழற்ச்சிக்கு கொண்டு செல்லுதல், கழிப்பறை கட்டுவதற்கு இடவசதி இல்லாத குடியிருப்புகளில் உள்ள நபர்கள் சமுதாய கழிவுகள் பயன்படும் வகையில் தினசரி தூய்மைபடுத்துதல், நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிவறைகளை மாணவர்கள் தினசரி பயன்படுத்தும் வகையில் பராமரிப்பு செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளுவதற்கு துப்புரவு பணியாளர்கள் தற்போது போதுமானதாக இல்லை. நகராட்சியில் தோற்றுவிக்கப்பட்ட துப்புரவு பணிகள் மொத்தம் 143, தற்போது காலிப்பணியிடங்கள் 44, பணியில் உள்ள துப்புரவு பணியாளர்கள் 99, தூய்மை இந்தியா இயக்கம் சிறப்பாக நகராட்சியில் செயல்படுத்திட துப்புரவு பணியிடங்கள் உயர்த்தப்பட வேண்டியுள்ளது. நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் கீழ்க்கண்டவாறு விபரங்கள் சமர்ப்பிக்கப்படுகிறது. ஆரணி நகராட்சி 11.62 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும், 632363 மக்கள் தொகையும் கொண்ட நகரமாகும். இந்நகராட்சி எல்லைக்குள் தினசரி பல்வேறு பணிகளுக்காக வந்து செல்வோர் எண்ணிக்கை சுமார் 10000 ஆகும். இந்நகராட்சி பகுதியில் மொத்த தெருக்களும், 15061 SBM கணக்கெடுப்பு குடியிருப்புகளும், 33 வார்டுகளையும் கொண்டதாகும். தெருக்களின் நீளம் 58,710 கிலோ மீட்டர் ஆகும். இந்நகராட்சியில் 33 வார்டுகளில் உருவாகும் தினசரி திடக்கழிவுகளின் அளவு 27MT ஆகும். துப்புரவு பணியாளர்கள் அனுமதிக்கப்பட்ட இடம் 143, பணியில் உள்ளவர்கள் 99 காலிப்பணியிடம் 44.

இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு அரசாணை நிலை எண் 101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.3) துறை, நாள் 30.04.1997-இன்படி துப்புரவு பணியாளர் பணியிடங்கள் தோற்றுவித்தல் தொடர்பான அளவுகோளின்படி 226 பணியாளர்கள் தேவைப்படுகின்றது. கழிவறை தூய்மைக்கு 25பேர் ஆக மொத்தம் 251 ஆகும். எனவே, தூய்மை இந்தியா இயக்கத்தின் கீழ் திட்டப் பணிகளை சிறப்பாக செயல்படுத்திட வேண்டிய தேவையான துப்புரவு பணியாளர்கள் அனுமதிக்கப்பட்டது - 143 காலிப் பணியிடம் - 99 அரசாணை நிலை எண் 101-இன்படி - 251 துப்புரவுப் பணியாளர்கள் பற்றாக்குறை - 108 மீதமுள்ள 108 துப்புரவு பணியாளர்கள் பற்றாக்குறை குறித்து தனியார்மயம் மூலம் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை -5 அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதி வழங்கலாம். (கோப்பு எண் 892/2018/எச்1)

23 இந்நகராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.க.மோகன் என்பவர்கு புதியதாக இருசக்கர மோட்டார் வாகனம் வாங்க (அரசு ஆணை எண் 467 நிதி (சம்பளம்) துறை நாள் 22.09. 2009)ன்படி முன்பணமாக தொகை ரூ.50000/-மட்டும் வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதி அளிக்கலாம். (கோப்பு எண் 1008/பி2/2018)

24 இந்நகராட்சியில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.க.மதியழகன் என்பவர்கு புதியதாக இருசக்கர மோட்டார் வாகனம் வாங்க (அரசு ஆணை எண் 467 நிதி (சம்பளம்) துறை நாள் 22.09. 2009)ன்படி முன்பணமாக தொகை ரூ.50000/-மட்டும் வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதி அளிக்கலாம். (கோப்பு எண் 1009/பி2/2018)

25 ஆரணி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு - திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகள் - இரண்டாம் நிலை சேகரிப்பு பணிக்காகப் பயன்படுத்தப்படும் டம்பர் பிளேசர் தொட்டிகள் எட்டு எண்ணிக்கை பழுதடைந்துள்ளதை அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு பழுது நீக்கம் செய்வதற்கும், அதற்காக ஆகும் தோராய செலவினம் ரூ.30000/-க்கு மன்ற ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு பணிகள் மேற்கொள்வதற்கும் செலவுத் தொகை வழங்குவதற்கும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று உள்ளூரில் விலைப்புள்ளி பெற்று தொடர்நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 528/2018/எச்1)

26 ஆரணி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு 2017 - 2018 ஆம் ஆண்டிற்கு துப்புரவு பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய பாதுகாப்பு உபகரணங்கள் சப்ளை செய்வதற்கும் அதற்கான தோராய செலவுத் தொகை வழங்குவதற்கும் மன்றப் பொருள் தீர்மான எண் 78 நாள் 31.07.2017ல் ரூ.2.50 இலட்சத்திற்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.மேற்படி பாதுகாப்பு உபகரணங்கள் GEE JAY Agency நிறுவனம் சப்ளை பெறப்பட்டது செலவினத் தொகை மொத்தம் ரூ.307440/- ஆகும். கூடுதல் தொகை ரூ. 60000/-க்கு மன்றப் பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- அ) கூடுதல் செலவினத் தொகை ரூ. 60000/-க்கு மன்றம் அனுமதிக்கலாம். ஆ) பாதுகாப்பு உபகரணங்கள் சப்ளை செய்த GEE JAY Agency நிறுவனத்திற்கு செலவுத் தொகை வழங்க அனுமதிக்கலாம். (கோப்பு எண் 3861/எச்1/2018)

தனிஅலுவலர்,
ஆரணி நகராட்சி